**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30-ஆம் நாள் செவ்வாய்கிழமை

CC. No. 259 of 2025

CNR No. TNTV15-000463-2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 169/2024 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

எதிரி 1- வினோத்குமார், 32/2026,
த/பெ. காசிநாதன்,
மெயின் ரோடு,
வடகண்டம்.
எதிரி 2- சாவித்திரி, 26/2026,
க/பெ. காசிநாதன்,
மெயின் ரோடு,
வடகண்டம். ----- எதிரிகள்

------

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.259 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Kodavasal PS. in Cr.No.169/2024 |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:47:47 +0530

<table>
<tr><td>3.</td><td>Name of the accused</td><td colspan="3">K.Vinothkumar<br>K.Savithiri</td></tr>
<tr><td>4.</td><td>Father’s Name</td><td colspan="3">S/o. Kasinathan<br>W/o. Kasinathan</td></tr>
<tr><td>5.</td><td>Occupation</td><td colspan="3">-</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">A1 and A2- Main Road, Vadakandam</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">32/2026<br>26/2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">09.05.2024</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">09.05.2024<br>13.06.2024</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">-</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">-</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">08.06.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 02.06.2026 the accused questioned on substance of accusation U/s 294(b), 323, 326, 506(ii) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="5">15</td><td rowspan="5">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>07.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>12.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>12.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>23.06.26</td><td>23.06.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">24.06.2026</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:47:51 +0530

| | | |
|---|---|---|
| | | |
| 17. | Sentence on order | முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1 ஆம் எதிரியின் மீது சட்டப்பிரிவு 294(b), 326, 506(ii)இதச-ன் கீழும், 2 ஆம் எதிரியின் மீது இதச-ன் 323 கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

**<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>** :-

1. குடவாசல் காவல் சரகம் வடகண்டம் மெயின்ரோட்டை சேர்ந்த இவ்வழக்கின் வாதியும் 1 ஆம் எதிரியும் உடன் பிறந்த சகோதரிகள் ஆவார்கள். 1 ஆம் எதிரி அவரது அப்பா மின்சார



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:47:55 +0530

வாரியத்தில் பணிபுரிவதால் அந்த வேலையை தான் வாங்கிட வேண்டும் என்றும் எதிரியானவர் சாட்சி 1 சதீஷை தன் பாதுகாப்பில் வைத்திருக்கும் தனது தந்தையை பார்க்கவிடாமமல் தடுத்து வந்துள்ளார். எனவே சாட்சி-1 ஆனவர் கடந்த 21.05.2024 ந் தேதி மாலை 05.30 மணியளவில் எதிரி வீட்டில் இருந்த தன் அப்பாவை பார்ப்பதற்காக சென்ற போது 1 ஆம் எதிரி சாட்சி-1 யை குச்சிக்காரி, தேவடியா மொவனே நீ யாருடா என் வீட்டுக்கு வர்ற என காமகுரோதமாக திட்டியும், தன் வீட்டில் வைத்திருந்த அருவாலை எடுத்து சதீஷின் இடது காது, உச்சதலை, பின்புறத்தலை முழங்கால் ஆகிய இடங்களில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2 ஆம் எதிரியாகிய நீர் சாட்சி-1 யை கையால் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1 ஆம் எதிரி போகும் போது இன்னைக்கி தப்பிச்சிட்ட என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில்தான் என அருவாளை காட்டி மிரட்டியும் எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 326, 506(ii) IPC ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:00 +0530

போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் 1 ஆம் எதிரிகளின் மீது சட்டப்பிரிவு 294(b), 326, 506(ii) இதச-ன் கீழும், 2 மற்றும் 3 ஆம் எதிரிகளின் மீது 323 இதச-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என கூறினார்கள். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

6. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது தாயார் மற்றும் உடன் பிறந்த தம்பி ஆவார் என்றும், கடந்த 09.05.2024 ம் தேதி அன்று இரவு 08.00 மணியளவில் தனது தம்பி வினோத்குமார் என்பவர் வீட்டிற்கு அருகில் சென்று கொண்டிருந்த போது அன்றைய தினம் மின்வெட்டு துண்டிக்கப்பட்டு மின் விளக்குகள் எரியாத நிலையில் இருட்டாக இருந்த சமயத்தில் திடீரென்று தனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் என் மீது மோதி நான் கீழே விழுந்து விட்டேன் என்றும், அதில் தனக்கு இடது காது, தலைபகுதிகள், முழங்கால், கை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் தன்னை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு தன்னை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள் என்றும், தான் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் தன்னை விசாரித்த போது என் மீது மோதி



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:04 +0530

விபத்து ஏற்படுத்தி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்மொழியாக சொன்னேன் என்றும், போலிசார் தன்னிடம் ஒரு பேபரில் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், போலிசார் தன்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், அ.சா-.1 ஐ தனக்கு தெரியும் என்றும், அவரும் தனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார் என்றும், தனக்கு நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், தான் அன்று ஊரில் இல்லை என்றும், தனது அப்பா வீட்டிற்கு சென்றிருந்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து கூலிவேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், அ.சா-.1 ஐ எனக்கு தெரியும் என்றும், அவரும் தனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார் என்றும், தனக்கு நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், தேதி மாதம் வருடம் சரியாக நினைவில்லை என்றும், ஒரு நாள் தான் வீட்டில் இருந்த போது போலீசார் தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அதில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும், தன்னிடம்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:08 +0530

காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**) என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு. ஜெய்சங்கர் என்பவர் தற்போது பணி ஓய்வு பெற்று மயிலாடுதுறையில் வசித்து வருவதாலும் மேற்படி நபரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி தான் இவ்வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றும், கடந்த 09.05.2024 ம் தேதி அன்று இரவு 08.00 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று கடந்த 10.05.2024 ம் தேதி அன்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த காசிநாதன் மகன் சதீஷ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் வந்து காவல் நிலைய மனு எண். 262/2024 ஆக மனு பதிவு செய்யப்பட்டிருந்ததை மேற்படி உதவி ஆய்வாளர் திரு. ஜெய்சங்கர் என்பவர் கடந்த 21.05.2024 ம் தேதி அன்று மேற்படி மனுவினை விசாரணைக்குப்பின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்த நிலையில் அன்றைய தினமே காவல் நிலைய குற்ற எண். 169/2024 இதச சட்டபிரிவுகள் 294(b), 323, 324, 506(2) ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.**)



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:12 +0530

என்றும், பின்னர் இவ்வழக்கினை மேற்படி காவல் உதவி ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே பகல் 18.30 மணியளவில் சாட்சிகள் செல்வராஜ் மற்றும் மணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், (**பார்வைமகசர் அ.சா.ஆ. 5 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.**) என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சதீஷ் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்த திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் சிவராமன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேலும் காயம்பட்ட சதீஷ் என்பவருக்கு சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் சதாம்உசேன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவ சட்ட கருத்துரையை பெற்று தாக்கல் செய்துள்ளர் என்றும், ( **மருத்துவ சட்ட கருத்துரை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.**) மேற்படி காயம்பட்ட சதீஷ் என்பவர்க்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளார் என்றும், மேலும், மேற்படி மருத்துவரின் கருத்துரையின் அடிப்படையில் காயம்பட்ட சதீஷ் என்பவருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் சான்று வழங்கியுள்ளதாலும், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(b), 323, 324, 506(2) இதசவிலிருந்து 294(b), 323, 326, 506(2), இதசவாக சட்டப்பரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** என்றும், பின்னர்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:16 +0530

சம்பவம் உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மாண்பமை திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் எதிர் நோக்கும் பிணை பெற்று உரிய நீதிமன்றத்தில் ஆஜராகி தக்க சட்ட வழிகாட்டுதலுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற விபரத்தினை தெரிந்துக்கொண்டுள்ளார் என்றும், இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டபிரிவுகள் 294(b), 323, 326, 506(2)ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த 13.06.2024 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(3)-ன் படி வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் குவிமுச பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:20 +0530

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்கள்.

12. **அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான சதீஷ், குடவாசல் காவல் சரகம் வடகண்டம் மெயின்ரோட்டை சேர்ந்த இவ்வழக்கின் வாதியும் 1 ஆம் எதிரியும் உடன் பிறந்த சகோதரிகள் ஆவார்கள். 1 ஆம் எதிரி அவரது அப்பா மின்சார வாரியத்தில் பணிபுரிவதால் அந்த வேலையை தான் வாங்கிட வேண்டும் என்றும் எதிரியானவர் சாட்சி 1 சதீஷை தன் பாதுகாப்பில் வைத்திருக்கும் தனது தந்தையை பார்க்கவிடாமமல் தடுத்து வந்துள்ளார். எனவே சாட்சி-1 ஆனவர் கடந்த 21.05.2024 ந் தேதி மாலை 05.30 மணியளவில் எதிரி வீட்டில் இருந்த தன் அப்பாவை பார்ப்பதற்காக சென்ற போது 1 ஆம் எதிரி சாட்சி-1 யை குச்சிக்காரி, தேவடியா மொவனே நீ யாருடா என் வீட்டுக்கு வர்ற என காமகுரோதமாக திட்டியும், தன் வீட்டில் வைத்திருந்த அருவாலை எடுத்து சதீஷின் இடது காது, உச்சதலை, பின்புறத்தலை முழங்கால் ஆகிய இடங்களில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2 ஆம் எதிரியாகிய நீர் சாட்சி-1 யை கையால் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1 ஆம் எதிரி போகும் போது இன்னைக்கி தப்பிச்சிட்ட என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில்தான் என அருவாளை காட்டி மிரட்டியும் குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:24 +0530

என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது தாயார் மற்றும் உடன் பிறந்த தம்பி ஆவார் என்றும், கடந்த 09.05.2024 ம் தேதி அன்று இரவு 08.00 மணியளவில் தனது தம்பி வினோத்குமார் என்பவர் வீட்டிற்கு அருகில் சென்று கொண்டிருந்த போது அன்றைய தினம் மின்வெட்டு துண்டிக்கப்பட்டு மின் விளக்குகள் எரியாத நிலையில் இருட்டாக இருந்த சமயத்தில் திடீரென்று தனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் என் மீது மோதி நான் கீழே விழுந்து விட்டேன் என்றும், அதில் தனக்கு இடது காது, தலைபகுதிகள், முழங்கால், கை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் தன்னை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு தன்னை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள் என்றும், தான் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் தன்னை விசாரித்த போது என் மீது மோதி விபத்து ஏற்படுத்தி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்மொழியாக சொன்னேன் என்றும், போலிசார் தன்னிடம் ஒரு பேபரில் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், போலிசார் தன்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன் என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 மற்றும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ம் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:29 +0530

அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில் அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றவாளிகள் என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும், இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு கு.வி.மு.ச பிரிவு 320-ன் கீழ் ஒரு மனுவினை தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த சமாதான மனுவில் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துள்ளதையும் காணமுடிகிறது.

16. இந்நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *Madan Mohan Abbot* ***Vs*** *State of Punjab reported in (2008) 4 SCC 582 : (2008) 2 SCC (Crl.) 464* என்ற வழக்கில் வழங்கியுள்ள முன்தீர்ப்பில் பத்தி 5-ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும், எதிரியுடன் சமாதனமாக செல்லும்போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு :

> *"....We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the*



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:33 +0530

*Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law."*

17. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. எனவே, இவ்வழக்கில் 1 ஆம் எதிரியின் மீது சட்டப்பிரிவு 294(b), 326, 506(ii)இதச-ன் கீழும், 2 ஆம் எதிரியின் மீது 323 இதச-ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:37 +0530

**உத்தரவு**

19. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1 ஆம் எதிரியின் மீது சட்டப்பிரிவு 294(b), 326, 506(ii)இதச-ன் கீழும், 2 ஆம் எதிரியின் மீது 323 இதச-ன் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 30-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சதீஷ்-புகார்தாரர் |
| அ.சா.2 | திருமதி.சுமதி-கண்ணுற்ற சாட்சி |

| | |
|---|---|
| அ.சா.3 | திரு. செல்வராஜ்- பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.4 | திரு. சூர்யமூர்த்தி-உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 09.05.2024 | புகார் வாக்குமூலத்தில் அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 21.05.2024 | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 09.05.2024 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | 21.05.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 21.05.2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 21.05.2024 | மாதிரி வரைப்படம் |
| அ.சா.ஆ.7 | 09.05.2024 | மருத்துவ சட்ட கருத்துரை |
| அ.சா.ஆ.8 | 13.06.2024 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | - |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 25.09.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 02.02.2026 | | |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | எதிரி தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் 07.05.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. | | |
| | | அரசு தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 311-ன் கீழ் 23.06.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது. | | |
| 5. | சாட்சிகள் விசாரணை | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW-1 : | 07.05.26 | - |
| | | PW-2 : | 12.05.26 | - |
| | | PW-3 : | 12.05.26 | - |
| | | PW-4 : | 23.06.26 | 23.06.26 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 23.06.2026 | | |
| 7. | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | - | | |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | - | | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.30 06:48:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.